# வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைச் சுற்றறிக்கை இலக்கம் 01

எனது இல. ரீரீஐபீ/01/2007(1)
வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக்
கொள்கைத் திணைக்களம்,
நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01.
2007.03.30

அமைச்சுகளின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள் மற்றும்
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்,

## சலுகை அடிப்படையில் வாகனங்களை இறக்குமதி செய்தல்

இச்சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய உத்தியோகத்தர்களுக்காக சலுகை (தீர்வைச் சலுகை) அடிப்படையில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான திட்டம், 2007 ஏப்ரல் மாதம் 25 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

01. **தகைமைகள்**

பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்யும் உத்தியோகத்தர்கள் இச்சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் கீழான நிபந்தனைகள், நியதிகளின் கீழ்த் தீர்வைச் சலுகையின் கீழ் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராவர்.

(i) 2006.04.25 ஆந் தேதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல. 06/2006 இல் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவைகளில் "சிரேட்ட மட்டத்தில்" உள்ளடக்கப்படும் சேவைகளில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சம்பளத் தொகுதிகளில் நிரந்தர பதவி வகிக்கும் ஆகக் குறைந்தது 5 வருட தொடர்ச்சியான மற்றும் செயற்படு சேவையுடைய உத்தியோகத்தர்கள்,

எஸ்எல் 1-2006 எஸ்எல் 5-2006 எஸ்எப் 1-2006

எஸ்எல் 2-2006 எஸ்எல் 6-2006 எஸ்எப் 2-2006

எஸ்எல் 3-2006 எஸ்எல் 7-2006 எஸ்எப் 3-2006

எஸ்எல் 4-2006 எஸ்எல் 8-2006 எஸ்எப் 4-2006

(ii) இலங்கைப் பாராளுமன்ற பணியாள் தொகுதியில் பணிபுரியும், அட்டவணை இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிரந்தர பதவியொன்றில் ஆகக் குறைந்தது 5 வருடங்கள் தொடர்ச்சியான மற்றும் செயற்படு சேவையொன்றையுடைய உத்தியோகத்தர்கள்.

(iii) முப்படைகளில் கடமையாற்றும் அட்டவணை இலக்கம் II இல் குறிப்பிடப்பட்டுள்ள நிரந்தர பதவியொன்றில் அல்லது அதற்கு மேலான நிரந்தர பதவியொன்றில் ஆகக்குறைந்தது 5 வருடங்கள் தொடர்ச்சியான மற்றும் செயற்படு சேவையையுடைய உத்தியோகத்தர்கள்.

(iv) இலங்கைப் பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிலும் பணிபுரியும் அட்டவணை இல. III இல் குறிப்பிடப்பட்டுள்ள நிரந்தர பதவியொன்றில் ஆகக்குறைந்தது 5 வருடங்கள் தொடர்ச்சியான மற்றும் செயற்படு சேவையையுடைய உத்தியோகத்தர்கள்.

(v) இச்சுற்றறிக்கையில் செயற்படு சேவை என்பதன் மூலம் கருதப்படுவது, தகைமை பெறும் ஒரு பதவியில் உத்தியோகத்தரது சேவைக் காலத்தை கணிப்பிடும்போது சேவையில் இடைநிறுத்தம் செய்யப்பட்டதன் மூலம் அல்லது சம்பளமற்ற விடுமுறையைப் பெற்றுக்கொண்டதனால், உரிய பதவிக்கு நியமனம் பெறுவதனை முற்திகதியிடல் மூலமான காலத்தைக் உள்ளடக்காது கணிப்பிடப்படும் சேவைக்காலம் எனப் பொருள்படும்.

## 02. தகைமைபெறாத முக்கிய சந்தர்ப்பங்கள்

பின்வரும் விசேட சந்தர்ப்பங்களின் கீழ்க் குறிப்பிடப்படும் உத்தியோகத்தர்கள் இச்சுற்றறிக்கையின் பிரகாரம் வாகன இறக்குமதிப் பத்திரமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு தகமையற்றவர்களாவர்.

(i) இச்சுற்றறிக்கையில் 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை பெறும் பதவியொன்றில் அல்லது சம்பள முறைமையொன்றிற்குத் தனிப்பட்ட முறையில் அல்லது விசேட சேவை அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள அல்லது சம்பளமொன்று வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்

(ii) விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திகதிக்கு முன்னர் 5 வருட காலத்தினுள் 1999.02.22 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை இலக்கம் 866 அல்லது 1999.06.23 ஆந் திகதிய திறைசசேரி சுற்றறிக்கை இலக்கம் 866(1) அல்லது 2000.04.07 ஆந் திகதியுடைய வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 165 இன் கீழ் அல்லது வேறு ஏதும் சலுகைத் திட்டங்கள் மூலம் வாகனமொன்றை இறக்குமதி செய்துள்ள உத்தியோகத்தர்கள்.

(iii) இச்சுற்றறிக்கையில் 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைபெறும் உத்தியோகத்தர் தொகுதியில் அரசாங்கத்தின் கீழ்ச் செயற்படும் கருத்திட்டங்களுக்காக இரண்டாம் நிலை அடிப்படையில் அல்லது சம்பளமற்ற விடுமுறையின் கீழ்த் தற்போது விடுவிக்கப்பட்டுள்ள உத்தியோத்தர்கள்.

(iv) தமது சேவைக்காலத்தை முடித்துக்கொண்டு அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றதன் பின்னர் ஒப்பந்த அடிப்படையில் இச்சுற்றறிக்கையில் 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைபெறும் பதவியொன்றுக்காக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்.

## 03. நிபந்தனைகளும் நியதிகளும்

(i) இத்திட்டத்தின் கீழ்ச் சலுகைபெறும் உத்தியோகத்தர்களது சேவைக் காலமானது தகைமை பெறும் பதவிக்கு நியமனம் பெற்ற திகதியிலிருந்து அல்லது குறிப்பிட்ட பதவிக்கு பதவியுயர்வு பெற்ற தினத்திலிருந்தே கணிப்பிடப்படும்.

(ii) இத்திட்டத்தின் கீழ் வாகனமொன்றை இறக்குமதிசெய்வதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர் (உ+ம் - நாணயக் கடிதங்களைத் திறத்தல்) திறைசேரியின் செயலாளர் அல்லது வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் முன்அனுமதியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(iii) இத்திட்டத்தின் கீழ்த் தகைமைபெறும் உத்தியோகத்தர் ஒருவர் வகிக்கும் பதவிகளின் எண்ணிக்கை கவனத்திற்காள்ளப்படாது ஒரு வாகனத்தை மாத்திரம் இறக்குமதி செய்வதற்கு உரித்துவடையவராவர்.

(iv) இத்திட்டத்தின் கீழ்ப் புத்தம் புதிய (பாவிக்கப்படாத, Brand New) வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்காக மாத்திரம் அனுமதியுண்டு. மேலும், இச்சுற்றறிக்கையின் பயன்பாட்டுக்காக வாகனம் எனப்படுவது கார், ஜீப், ஒற்றை கப், (single Cab) டபிள் கப் (Double Cab) ஆகியவற்றை மட்டுமே உள்ளடக்கும்.

(v) இத்திட்டத்தின் கீழ் வாகனமொன்றை இறக்குமதி செய்யும் உத்தியோத்தர்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடம் தமது வருமான நிலையினைப் பற்றி வெளியிடல் வேண்டும். உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் குறிப்பிட்ட உத்தியோகத்தரின் வருமான வரி நிலைமை பற்றி சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.

(vi) இத்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யும் வாகனமொன்றை, இறக்குமதி செய்யும் தினத்திலிருந்து 5 வருடங்கள் பூர்த்தியாகும்வரை விற்பனை செய்தல், உரிமை மாற்றுதல், குத்தகைக்கு விடுதல், வாடகைக்கு விடுதல் அல்லது வேறு யாதேனும் வெளியேற்றல் ஒன்றை மேற்கொள்ளக்கூடாது.

(vii) இத்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்த வாகனமொன்றைத் திறைசேரியின் செயலாளரினது முன்அனுமதியின்றி உரிமை மாற்றம் செய்ய முடியாதெனக் குறிப்பொன்று மோட்டார் வாகனங்கள் போக்குவரத்து ஆணையாளரினால் 05 ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும் வகையில் பதிவுப் புத்தகத்தில் இடப்படும். அதற்கு மேலதிகமாக வாகனத்துடன் தொடர்புடைய இலக்கப் பலகையில் (Number Plate) விசேடமாக இனங்காணக்கூடிய முத்திரையொன்று மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் பதிக்கப்படும்.

(viii) இத்திட்டத்தின் கீழ் வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்காக அனுமதிப் பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளும் அனுமதிப்பத்திரதாரர், அந்த அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் முடிவடைவதற்கு முன்னர் அல்லது வாகனத்தை இறக்குமதி செய்வதற்காக நாணயக் கடிதத்தைத் திறத்தல் அல்லது வாகனத்தை கப்பலேற்றிய நிலையில் அல்லது வாகனத்தை இறக்குமதி செய்த திகதியிலிருந்து 5 ஆண்டுகள் காலம் பூர்த்தியாவதற்கு முன்னர் இறந்தால் அந்த அனுமதிப் பத்திரதாரரின் சட்ட ரீதியான உரிமையை அவரது வாழ்க்கைத் துணைக்குப் பெற்றுக் கொள்ள முடியும்.

(ix) இத்திட்டத்தின் கீழ் இறக்குமதிசெய்த வாகனமொன்றை 5 ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னர் திறைசேரியின் செயலாளரினது அனுமதியுடன் வெளியேற்றுவதாயின், அன்றைய தினத்திற்கு இலங்கைச் சுங்கத் திணைக்களத் தினால் தேய்வு அடிப்படை மீது கணிப்பிடப்படும் தீர்வையையும் மற்றும் அனுமதிப்பத்திரதாரர் (இறக்குமதியாளர்) அந்த வாகனத்தை இறக்குமதி செய்யும்போது இலங்கைச் சுங்கத் திணைக்களத்திற்கு செலுத்திய தீர்வைக்கு மிடையிலான வித்தியாசத்தை இலங்கைச் சுங்கத் திணைக்களத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.

(x) இத்திட்டத்தின் கீழ் இறக்குமதிசெய்யும் வாகனமொன்றை திறைசேரியின் செயலாளரினது முன்அனுமதியின்றி இறக்குமதிசெய்த தினத்திலிருந்து 5 ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னர் விற்பனை செய்தல், உரிமை மாற்றுதல், வாடகைக்கு விடுதல் அல்லது வேறு யாதேனும் வெளியேற்றலை மேற்கொள்ளல் அல்லது இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள யாதேனுமொரு நிபந்தனையை அல்லது நியதியை மீறும் பட்சத்தில், சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

(xi) யாரேனும் அனுமதிப்பத்திரத்திரதாரர் ஒருவர் அந்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிலிண்டர் கொள்திறன் மற்றும்/ அல்லது CIF பெறுமதியைவிட அதிகமான விலையில் வாகனமொன்றை இறக்குமதி செய்வாராயின் இந்தத் தீர்வைச் சலுகையைப் பெறுவதற்குத் தகுதிபெற மாட்டார். நாணயமாற்று வீதங்களின்

மாற்றங்களுக்கேற்ப CIF பெறுமதி வித்தியாசப்படுமாகையால் இது தொடர்பான மாற்றங்களுக்கு அனுமதிப் பத்திரதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

(xii) இத்திட்டத்தின் கீழ் இறக்குமதிசெய்யப்படும் வாகனமொன்று இறக்குமதி செய்யப்பட்ட திகதியிலிருந்து 5 ஆண்டுகள் முடிவடைந்ததன் பின்னர் இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளிலிருந்து விடுவிக்கப்படும்.

## 04. <u>தீர்வைச் சலுகைகள்</u>

(i) இத்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யக்கூடிய வாகன வகையின் உச்ச சிலிண்டர் கொள்திறன் மற்றும் உச்ச CIF பெறுமதி இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ii) இத்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யும் வாகனங்களுக்காகச் செலுத்த வேண்டிய தீர்வை மற்றும் ஒன்றுசேர்த்த பெறுமதி மீதான வரி (VAT) போன்ற வரிகளின் கூட்டுத்தொகை, CIF பெறுமதியின் வீதமாக இணைப்பு I இல் (6) ஆம் பந்தியில் காணப்படுகின்றது. மேலும் இச்சுற்றறிக்கைக்கு தனிப்பட்ட முறையில், உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரிச் சட்டத்தின் 3 ஆம் உறுப்புரையின் கீழ் விதிக்கப்படும் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வரிவீதமொன்று செஸ்வரி (Cess), துறைமுக, விமான நிலையக் கட்டணங்கள், பிராந்திய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கட்டணம், சமூகப் பொறுப்புக் கட்டணம் மற்றும் காலத்துக்குக் காலம் விதிக்கக்கூடிய ஏனைய வரிகள் அல்லது கட்டணங்களை இறக்குமதியாளர் செலுத்த வேண்டும்.

(iii) இணைப்பு I இல் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றீடுகளில் பொருத்தமான மாற்றீடொன்றைத் தகுதிபெறும் உத்தியோகத்தர்களுக்குத் தேர்ந்தெடுக்க முடியும்.

## 04. <u>நடவடிக்கை முறை</u>

(i) இச்சுற்றறிக்கையின் கீழ் வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்கு எதிர்பார்க்கும் தகுதியுடைய உத்தியோகத்தர் ஒருவரினால் இணைப்பு II இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவம் ஒன்றின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். அவ்வாறானதொரு விண்ணப்பம் அமைச்சுகளின் செயலாளர்கள்/ மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள் ஆகியோரால் தனிப்பட்ட ரீதியில் சிபாரிசு செய்யப்படல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்பத்திரம் ஒன்றில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் தரவுகள் தொடர்பாக வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் திருப்திப்படின் அந்த உத்தியோகத்தரால் சுங்கப் பணிப்பாளர் நாயகம் மற்றும் தேசிய இறைவரி ஆணையாளர் நாயகம் ஆகியோருக்குப் பிரதியொன்றுடன் வரிச் சலுகை அனுமதிக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.

(iii) சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் இத்திட்டத்தின் கீழ்த் தீர்வைச் சலுகை பெற்றுக்கொடுப்பதானது, வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்படும் உத்தியோகத்தர் ஒருவரின் அனுமதிக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதென திருப்தியளித்த பின்னராகும்.

## 06. <u>ஏனைய விடயங்கள்</u>

(i) இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் பற்றிய சிக்கலான தன்மைகள் ஏதும் ஏற்படின் அது தொடர்பாகப் பரிசீலனை செய்து சிபாரிசுகளை சமர்ப்பிப்பதற்காக, அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் (தலைவர்), முகாமைத்துவ

சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், பொது நிருவாக அமைச்சின் தாபனப் பணிப்பாளர் நாயகம் மற்றும் தேசிய சம்பள ஆணைக்குழுவின் செயலாளர் ஆகியோரை உள்ளடக்கிய குழுவின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். இது தொடர்பான இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் திறைசேரியின் செயலாளரிடம் காணப்படும்.

ஒப்பம்/ பீ. பி. ஜயசுந்தர
திறைசேரியின் செயலாளர் மற்றும்
நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளர்

<u>பிரதிகள்</u>

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதம அமைச்சரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் தலைமை அதிபதி
5. தாபனப் பணிப்பாளர் நாயகம்
6. இறைவரி ஆணையாளர் நாயகம்
7. சுங்கப் பணிப்பாளர் நாயகம்
8. பணிப்பாளர் நாயகம், அரச நிதித் திணைக்களம்
9. பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
10. செயலாளர், தேசிய சம்பள ஆணைக்குழு
11. மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம்

**இணைப்பு I**

| **தொகுதி** (1) | **தகுதிபெறும் பதவி யொன்றில் சேவைக் காலம்** (2) | **வாகன வகை** (3) | **உச்ச சிலிண்டர் கொள்திறன்** (4) | CIF **பெறுமதி ஐ.அ. டொலர்** (5) | **இறக்குமதியாளரினால் செலுத்த வேண்டிய தீர்வை மற்றும் பெறுமதிசேர் வரிகளின் மீதான கூட்டுத்தொகை,** CIF **பெறுமதியின் வீதமாக** (6) |
|---|---|---|---|---|---|
| **தொகுதி** I | **இச்சுற்றறிக்கை யில் முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்ள்ள ஆகக் குறைந்த தகைமையினை உடைய உத்தியோகத்தர்கள்** | **பெற்றோல்** | 1300 CC | 11,500 | 25 |
| | | | 1600 CC | 12,500 | 35 |
| | | **டீசல்** | 2000 CC | 14,000 | 40 |
| **தொகுதி** II | **இச்சுற்றறிக்கையின் முதலாம் பந்தியிலுள்ள ஆகக் குறைந்த தகைமைகளைப் பூர்த்திசெய்ததன் பின்னர் ஆகக் குறைந்தது** 5 **ஆண்டுகளுக்கு மேலான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்கள்** | **பெற்றோல்** | 1300 CC | 11,500 | 25 |
| | | | 1600 CC | 12,500 | 35 |
| | | | 1800 CC | 14,000 | 40 |
| | | **டீசல்** | 2000 CC | 14,000 | 40 |
| | | | 2800 CC | 16,000 | 45 |

**இணைப்பு II**

**வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் 01 இன் கீழ் வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்கான விண்ணப்பப் படிவம்**

1. (i) முதலெழுத்துகளுடன் பெயர் :
   (ii) முழுப் பெயர் :
   (iii) தேசிய அடையாள அட்டை இலக்கம் :
   (iv) சேவையாற்றும் (அ) திணைக்களம்/ நிறுவனத்தின் பெயர் :

   (ஆ) அமைச்சு

   (v) அலுவலக முகவரி :

   (vi) தனிப்பட்ட முகவரி :

   (vii) தொலைபேசி இலக்கம் : அலுவலகம் : தனிப்பட்ட :

2. (i) சேவையும் தரமும்/வகுப்பும் :
   (ii) பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :
   (iii) தற்போதைய பதவிப் பெயர் :
   (iv) உத்தியோகத்தர் சலுகைக்கான தகுதிபெறும் பதவி/வகுப்பு/தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி :
   (v) விசேட சேவை அடிப்படையின் மீது அல்லது உத்தியோகத்தருக்குத் தனிப்பட்ட முறையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளதா என்பது பற்றி :
   அவ்வாறெனின் பதவிக்கு நியமித்த திகதி: (சம்பந்தப்படுமாயின் மாத்திரம்)

   (vi) சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் உரிய அட்டவணை : (சம்பந்தப்படுமாயின் மாத்திரம்)
   (vii) சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியின் உப பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைபெறும் பதவியில் செயற்படு சேவைக்காலம் :

| பதவி | முதல்<br>ஆண்டு மாதம் திகதி | வரை<br>ஆண்டு மாதம் திகதி | மொத்த சேவைக் காலம் | | |
|---|---|---|---|---|---|
| | | | ஆண்டு | மாதம் | திகதி |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| மொத்தம் | | | | | |

3. (i) கடந்த 05 ஆண்டு காலப்பகுதியினுள் யாதேனுமொரு சலுகைத் திட்டத்தின் கீழ் வாகனமொன்றை இறக்குமதி செய்துள்ளாரா?

(ii) அவ்வாறு வாகனம் இறக்குமதி செய்த திகதி :

4. இறக்குமதி செய்வதற்கு எதிர்பார்க்கும் வாகனத்தின்

(i) வகுப்பு/வகை மற்றும் வடிவமைப்பு :

(ii) டீசலா அல்லது பெற்றோலா என்பது பற்றி :

(iii) சிலிண்டர் கொள்திறன் :

(iv) நாணயக் கடிதத்தைத் திறப்பதற்கு எதிர்பார்க்கும் வங்கி மற்றும் கிளையின் பெயர் :

(v) சுற்றறிக்கையில் இணைப்பு (I) இன் பிரகாரம் பொருத்தமான தொகுதி :

மேற்படி தகவல்கள் எனக்குத் தெரிந்த வகையிலும் மற்றும் நம்பிக்கையின் மீது உண்மையானவையும் செம்மையானவையும் என உறுதிப்படுத்துகிறேன். என்னால் குறிப்பிடப்பட்ட மேற்படி தகவல்களில் யாதேனும் மாற்றங்கள் ஏற்படின் உடனடியாக அது பற்றி திறைசேரியின் செயலாளரினது கவனத்திற்குக் கொண்டு வருவேன். இங்கு என்னால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பொய்யானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டால் இத்திட்டத்தின்கீழ் வாகனமொன்றைக் இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்ட தீர்வை, ஏனைய வரிகள் மற்றும் கட்டணங்கள் என்பன என்னிடமிருந்து மீளப்பெற்றுக்கொள்ளப்பட முடியும் எனவும் இந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விதிமுறையும் அல்லது நிபந்தனையும் மீறப்படுமாயின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாம் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு நான் கட்டுப்படுவதாகவும் மேலும் குறிப்பிடுகின்றேன்.

விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :

எனது இலக்கம் :

செயலாளர்

.............................. அமைச்சு

மேற்படி விண்ணப்பப்படிவத்தில் 1, 2, மற்றும் 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பரிசீலிக்கப்பட்டது எனவும், அத்தகவல்கள் சரியானவை எனவும், திரு/திருமதி/செல்வி .............................. அவர்கள் இச்சலுகைக்குத் தகுதியுடையவர் எனவும் உறுதி செய்கின்றேன். வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைச் சுற்றறிக்கை இலக்கம் 01 இன் கீழ்ச் சலுகை அடிப்படையின் மீது வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்கு திரு/திருமதி/செல்வி .............................. அவர்களுக்கு அனுமதி வழங்குவதற்குச் சிபாரிசு செய்கின்றேன்.

திணைக்களத் தலைவர்/ நிறுவனத் தலைவர்

திகதி : ஒப்பமும் பதவி முத்திரையும்

விண்ணப்பதாரியின் தொடர் இலக்கம் :

எனது இலக்கம் :

பணிப்பாளர் நாயகம்
வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக்
கொள்கைத் திணைக்களம்.

விண்ணப்பதாரர் தொடர்பாக வழங்கப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்கள் என்பனவற்றின் உண்மைத் தன்மை பற்றித் திருப்தியளித்ததன் பின்னர் விண்ணப்பதாரரான திரு/திருமதி/செல்வி .............................. அவர்களுக்கு வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைச் சுற்றறிக்கை இலக்கம் 01 இன் கீழ் வாகனமொன்றை இறக்குதி செய்வதற்கு அனுமதி வழங்குவதற்குச் சிபாரிசு செய்கின்றேன்.

செயலாளர்/அமைச்சு

திகதி :

ஒப்பமும் பதவி முத்திரையும்

# அட்டவணை I

| | | |
|---|---|---|
| பாராளுமன்றம் | : | பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் |
| | : | பாராளுமன்றத்தின் பிரதிச் செயலாளர் நாயகம் |
| | : | பாராளுமன்றத்தின் உதவிச் செயலாளர் நாயகம் |
| | : | படைக்கலச் சேவிதர் |
| | : | ஹன்சாட் பதிப்பாசிரியர் |
| | : | இணைப்புப் பொறியியலாளர் |
| | : | பணிப்பாளர் |
| | : | பிரதிப் படைக்கல சேவிதர் |
| | : | பாராளுமன்றத்தின் பிரதம உரைபெயர்ப்பாளர் |
| | : | நூலகர் |
| | : | பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்) |
| | : | கணக்காளர் |
| | : | ஹன்சாட் பிரதிப் பதிப்பாசிரியர் |

## அட்டவணை II

| | | |
|---|---|---|
| **இலங்கைத் தரைப்படை** | : | **லெப்டினன் கர்ணல் மற்றும் அதற்கு மேல்**<br>(Lieutenant Colnel and above) |
| **இலங்கை வான்படை** | : | **பறக்கும் கொமதோர் மற்றும் அதற்கு மேல்**<br>(Flying Commodore and above) |
| **இலங்கைக் கடற்படை** | : | **கொமதோர் மற்றும் அதற்கு மேல்**<br>(Commodore and above) |

# அட்டவணை III

| | | |
|---|---|---|
| பல்கலைக்கழகங்கள் | : | வேந்தர் |
| | : | உபவேந்தர் |
| | : | பேராசிரியர் |
| | : | உதவி பேராசிரியர் |
| | : | சிரேட்ட விரிவுரையாளர் |
| | : | விரிவுரையாளர் |
| | : | நூலகர் |
| | : | பிரதி நூலகர் |
| | : | பணிப்பாளர் |
| | : | பொறியியலாளர் (முதலாம் மற்றும் இரண்டாம் தரம்) |
| | : | மருத்துவ அதிகாரி |
| | : | பல்மருத்துவ அதிகாரி |
| | : | பதிவாளர்/ பிரதிப் பதிவாளர்/ சிரேட்ட உதவிப் பதிவாளர் |
| | : | பொருளாளர்/பிரதிப்பொருளாளர்/சிரேட்டஉதவிப் பொருளாளர் (Bursar/Deputy Bursar)/Senior Assistant Bursar) |
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | : | செயலாளர் |
| | : | மேலதிகச் செயலாளர் |
| | : | நிதிக் கட்டுப்பாட்டாளர் |
| | : | கணக்காளர் |
| | : | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் |
| | : | பிரதிச் செயலாளர் |
| | : | பிரதிக் கணக்காளர் |
| | : | பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் |
| | : | சிரேட்ட உதவிச் செயலாளர் |
| | : | சிரேட்ட உதவிக் கணக்காளர் |